
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1057**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

**152**



# ஜி.டி.நாயுடு மேம்பாலம்!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

கோவை மாநகர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையும், மிக முக்கியமான எதிர்பார்ப்பும் என்றால் அது, அவிநாசி சாலை மேம்பாலம். தொழில் வளர்ச்சி, கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, ஐ.டி. துறையின் அபரிமிதமான வளர்ச்சி என, திராவிட மாடல் ஆட்சிக்குப் பின்னர், கோவையின் முகம், பெரும் மாற்றத்தைக் கண்டுள்ளது. இதனால், கோவையில் போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அந்த சிக்கலுக்கு திராவிட மாடல் அரசு தந்த தீர்வுதான் ஜி.டி.நாயுடு மேம்பாலம்.

கோவை, உப்பிலிபாளையம் முதல் நீலாம்பூர் வரையிலான, 16 கி.மீ., கொண்ட அவிநாசி சாலைதான் மாநகரின் மத்திய ரேகை. இந்தச் சாலையில்தான் கோவையின் முக்கிய பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனை, விமான நிலையம் என அனைத்தும் அமைந்துள்ளன. அதனால், காலை, மாலை நேரங்களில் அந்த நீண்ட சாலை மார்க்கத்தில் நிலவி வந்த போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு, அங்கு மேல்மட்ட சாலை அமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை வைத்த நிலையில், கடந்த ஆட்சிக்காலத்தில் அதற்கான திட்டம் தீட்டப்பட்டது.

10.1 கிலோமீட்டர் நீளத்துக்கு, 1,621 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை 2020-ஆம் ஆண்டு அறிவித்தது முந்தைய அரசு. ஆனால், வழக்கம்போல, அந்த வேலைகளில் முழு கவனம் செலுத்தவில்லை. பணிகளைத் தொடங்கியதுடன், அவை ஆமை வேகத்தில்கூட நடைபெறவில்லை. 5 சதவிகித பணிகளைக்கூட முழுமையாக முடிக்கவில்லை. சாலைப் பணிக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளைக்கூட முந்தைய ஆட்சியினர் முடிக்காமல் வைத்திருந்தனர்.

இந்த நிலையில், ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், திட்ட மதிப்பீடு ரூ.1,791 கோடி என மாற்றியமைத்து, பணிகளைத் துரிதப்படுத்தியது நம் அரசு. குறிப்பாக, மேம்பாலத்துக்காக மொத்தம் 4.90 ஏக்கர் நிலம் ரூ.228 கோடி மதிப்பில் கையகப்படுத்தும் பணிகளை முடித்தது. முன்னேற்பாடு பணிகள், மேம்பால கட்டுமானம் ஆகியவை பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் விறுவிறுப்பாக மேற்கொள்ளப்பட்டன.

## திராவிட மாடல் தந்த தீர்வு!



### 10 வழித்தடங்கள்

மேம்பாலம் 4 வழிகளுடன் உயர்மட்ட சாலையாகவும், தரையில் விரிவுபடுத்தப்பட்ட 6 வழித்தட சாலையுடன் மொத்தம் 10 வழித் தடங்களும் முடிக்கப்பட்டு, திறப்பு விழாவுக்குத் தயாரானது. அக்டோபர் 9-ஆம் தேதி, நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த உயர்மட்ட பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து, மக்களுக்கு அர்ப்பணித்தார். திறப்பு விழாவில் கோவையின் புகழ்பெற்ற விஞ்ஞானி ஜி.டி நாயுடுவின் மகன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு முதலமைச்சர் அவர்களுடன் இணைந்து பாலத்தைத் திறந்து வைத்தார்.



“அப்பாவின் பெயரை வைத்து பாலம் திறந்தது மிகவும் பெருமையாக இருக்கிறது. கோவை மாநகரத்துக்கு இந்தப் பாலம் ஆயிரம் வருடங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இந்தியாவிலே, கோவையில்தான் விமான நிலையத்தை 15 நிமிடங்களில் சென்றடைய முடியும்.”

**- ஜி.டி.கோபால்,**
**ஜி.டி.நாயுடுவின் மகன்.**

> **கோவை நகர மையத்திலிருந்து விமான நிலையம் செல்லும் பயணம் வழக்கமாக 45 நிமிடங்கள் எடுக்கும் நிலையில், இப்போது, 10 நிமிடங்களுக்குள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.**

மேம்பாலம் *PRECAST SEGMENTAL BOX GIRDER* என்ற நவீன பொறியியல் முறையில் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்டு, பின் பாலத்தில் இணைக்கப்பட்டு உருவாக்க பட்டுள்ளது. மொத்த நீளம் 10.1 கிலோமீட்டர், அகலம் 17.25 மீட்டர்; 1,124 ஆழ்துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. 8 ஏறு-இறங்கு தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 305 பில்லர்களுடன் கட்டப்பட்டுள்ளது.

ஹோப்ஸ் - மருத்துவக்கல்லூரி இடையிலான ரயில் பாதை பகுதியைத் தாண்ட 52 மீட்டர் நீளமும் 725 டன் எடையும் கொண்ட சிறப்பு ரயில்வே கார்டர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### மிகப் பெரிய உயர்மட்ட பாலம்

தமிழ்நாட்டில் முதல் முறையாக பாலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மேம்பாலத்தில் பாதுகாப்புச் சுவர்கள், ரோலர் தடுப்புக்கருவிகள் உலகத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய உயர்மட்ட பாலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது அவிநாசி மேம்பாலம். இதனால் நகரின் போக்குவரத்து நெருக்கடி குறைந்துள்ளதுடன், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய முக்கிய தொழில் மாவட்டங்களுக்கான போக்குவரத்தும் எளிதாகியுள்ளது.

குறிப்பாக, கோவை நகர மையத்திலிருந்து விமான நிலையம் செல்லும் பயணம் வழக்கமாக 45 நிமிடங்கள் எடுக்கும் நிலையில், இப்போது, 10 நிமிடங்களுக்குள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் தொழில் நிறுவனங்கள், கல்வி, மருத்துவம், சுற்றுலா எனப் பலவற்றிலும் கோவையின் வளர்ச்சி வேகமெடுத்துள்ளது.

### 95 சதவிகித பணிகள்

திறப்பு விழா அன்று நம் முதலமைச்சர் அவர்கள் வெளிப்படுத்திய கருத்தில், “2020-இல் அறிவிக்கப்பட்டு, 2021 மே மாதம் வரையில் 5 சதவிகித பணிகள் மட்டுமே நடைபெற்றிருந்த அவிநாசி சாலை மேம்பாலம், நமது திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று, ரூ.1,791 கோடி செலவில் 10.10 கி.மீ நீளமுள்ள இந்தப் பாலத்தின் மீதமிருந்த 95% பணிகளையும் விரைந்து முடித்துள்ளது. கோவை என்றாலே புதுமை என்பதற்கேற்ப, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளால் பெருமை சேர்த்த இந்தியாவின் எடிசன், தந்தை பெரியாரின் உற்றக் கொள்கைத் தோழர் ஜி.டி. நாயுடுவின் பெயரை இந்த மேம்பாலத்துக்குச் சூட்டி மகிழ்கிறேன்” எனத் தெரிவித்திருந்தார்.

யாரால் தொடங்கப்பட்டிருந்தாலும், அவை தமிழ்நாட்டுக்கு என்ன பயன்கொடுக்கும் என்பதை அறிந்து, அவற்றுக்கு உயிர்கொடுக்கும் வேலையைத் தொடர்ச்சியாக செய்து வருகிறது திராவிட மாடல் அரசு. அந்த வரிசையில், தமிழ்நாட்டின் உள்கட்டமைப்புகளில் திராவிட மாடல் அரசு கொண்டுள்ள அக்கறைக்குச் சான்றாக, அவிநாசி சாலை ஜி.டி.நாயுடு பாலம் புதிய வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறது.

**...சாதனை தொடரும்**

## இலக்கிய அமைப்பும் ஏவல் படையா?

2025-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகளில், தமிழில் ச.தமிழ்ச்செல்வன் எழுதிய, ‘தமிழ் சிறுகதையின் தடங்கள்’ நூலுக்கு விருது அறிவிக்க, நடுவர் குழு இறுதி செய்து, சாகித்ய அகாடமியின் தேசிய நிர்வாகக் குழுவுக்கு அனுப்பியுள்ளது.

அந்தந்த மொழிக்கான நடுவர் குழுவின் பரிந்துரைகளுக்கு தேசிய நிர்வாகக் குழு ஒப்புதல் வழங்கிய நிலையில், ஒன்றிய கலாச்சார அமைச்சகம் தலையிட்டு, நிர்வாகக் குழுவின் முடிவுகளை நிறுத்தி வைத்துள்ளது. இந்தச் செயல் எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களிடையே கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. சமூக வலைதளங்களில் ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்குக்குக் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

‘தன்னாட்சி அதிகாரம் கொண்ட சாகித்ய அகாடமியின் புகழ்மிக்க வரலாற்றுக்கு செய்யும் துரோகம்’ எனக் கூறியுள்ள மக்களவை உறுப்பினர் எழுத்தாளர் சு.வெங்கடேசன், ஒன்றிய கலாச்சார அமைச்சகத்துக்கு ‘அகாடமியின் நிர்வாகக் குழு முடிவுகளை வெளியிட வேண்டும்’ எனக் கடிதம் எழுதியுள்ளார்.

சாகித்ய அகாடமி விருது தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே, அரசின் தலையீடுகள் இல்லாமல் விருது வழங்கப்பட்டு வருகிறது. இதனால், இலக்கியத்தில் நம்பகத்தன்மை பெற்ற விருதாக சாகித்ய அகாடமி விருது பெயர் பெற்றுள்ளது. இந்த நிலையில், அகாதமியின் சுதந்திரத்தில் தலையிட்டு, ஒன்றிய அரசு தேர்வுக் குழுவின் பரிந்துரைகளை நிறுத்தி வைத்துள்ளது. இதன்மூலம், தேர்வுக் குழுவின் முடிவுகளுக்கு மாறாக, அவர்கள் விரும்பும் படைப்பாளிகளுக்கு விருது வழங்க தலையீடு செய்யும் நோக்கம் வெளிப்பட்டுள்ளது. இது, இந்தியாவின் அறிவு நேர்மையை, தன்னாட்சி அமைப்பைச் சிதைக்கும் செயல் எனக் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. உச்ச நீதிமன்றம் முதல் தேர்தல் ஆணையம் வரை தன்னாட்சி அமைப்பைச் சிதைப்பதற்கு முனையும் ஒன்றிய அரசு, இலக்கிய அமைப்பையும் ஏவல் படையாக மாற்றத் துடிக்கிறது. எதிர் கருத்தாளர்களின் குரல் வெல்லட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



### வழக்கறிஞர் பணியில் 25-ஆம் ஆண்டு வாழ்த்து!



‘வணக்கம்’ வெ.ரவி

2005-ஆம் ஆண்டு மார்ச் மாதம், வழக்கறிஞர் பணியில் 25 ஆண்டுகள் நிறைவு செய்ததை முன்னிட்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து வாழ்த்து பெற்றேன். என்னுடன் கழக வழக்கறிஞர் புதுக்கோட்டை எஸ்.திருஞானசம்பந்தம் அவர்களும் தலைவரை சந்தித்து வாழ்த்து பெற்றார். முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் அ.ஜின்னா, தலைமைச் செயலகத்தில் பணியாற்றிய முன்னாள் அதிகாரி அப்துல் குத்தூஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.

**– ‘வணக்கம்’ வெ.ரவி,**
**கழக சொத்துப் பாதுகாப்புக் குழு**
**வழக்கறிஞர் பிரிவுத் தலைவர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தலைமை நிலையப் பொறுப்பாளர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையகமாக இயங்கிய அறிவகத்தின் முதல் பொறுப்பாளராக ஈ.வெ.கி. சம்பத் அவர்களை நியமித்தார் பேரறிஞர் அண்ணா. அவர் நான்கு மாதங்கள் அந்தப் பொறுப்பில் இருந்தார். அவருக்குப் பின், நாவலர் அவர்கள் தலைமை நிலையப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவரும் நான்கு மாதங்கள் பணியாற்றிய பின்னர், கே.ஏ.மதியழகன் நியமிக்கப்பட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131